மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய பல்லடம் தொகுதியில் 55.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 22.17 கோடி ரூபாய் மத்திய அரசு மானியத்துடன் 4.98 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடனும் பல்லடத்தில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துள்ளது என்பதையும், இன்றைக்கு அந்த இடத்திலே 6,000 நெசவு சார்ந்த தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றார்கள் என்பதையும் இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்து, மாமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி அனைத்து உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து மீண்டும் மனு செய்தார்களேயானால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

படகுக் குழாம்

***21892**—**திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலியிலுள்ள நயினார்குளத்தினைச் சீரமைத்து, அதில் படகுக் குழாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினை அனைத்துத் துறைகளிலும் முதலிடத்திற்குக் கொண்டு வர எடுத்த

2015 ஆகஸ்ட் 25]

ஆற்றல்மிகு நடவடிக்கைகளினால் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது. 2013 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயணிகள் வருகையில் தமிழகம் முதலிடத்தில் இருந்தது. 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையிலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல்முறையாக முதலிடத்தினைப் பெற்றுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் பெருமைகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சுற்றுலாத் துறைக்கு என்னை அமைச்சராக்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலுள்ள நயினார்குளத்தினை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 2–2–2006 அன்று ரூ.1.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இக்குளத்திற்கு நீர் வரத்து அதிகமாகும்போது, படகுக் குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டு, படகுப் போக்குவரத்து ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரங்கனின் பேரொளியாய், ஆண்டாளின் சுடரொளியாய், தமிழக மக்களை வாழ்வித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாநகர் பகுதியில் பாசனத்திற்காக அமைந்துள்ள முக்கியமான குளம், நயினார்குளம். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தவொரு பொழுதுபோக்கு அம்சமும் அங்கு கிடையாது. அதனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2006 ஆம் ஆண்டு அதற்கான அடிப்படைத் தேவைகளை மேற்கொள்வதற்காக

திட்டமிடப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் அது கிடப்பிலே போடப்பட்டு, எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. ஆகவே, மீண்டும் அதனைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

133—

சொந்தக் கட்டடம்

***35892 திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் ஆதி திராவிடர் நல வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தன்னுடைய அயராத உழைப்பாலும், ஈடு இணையற்ற தியாகத்தாலும், ஆழ்ந்த அறிவாற்றலாலும், தரணி போற்றுகின்ற தலைமைப் பண்பாலும், இதுவரையிலே வரலாறு காணாத வளர்ச்சிப் பாதையிலே தாய்த் தமிழ்நாட்டைத் தலைமை தாங்கி வழிநடத்தி, தமிழினத்தின் காவல் தெய்வமாகக் காத்து நிற்கின்ற தமிழர் குலசாமி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆதி திராவிடர் நலத் துறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டபின், கருணையின் பிறப்பிடம்,